Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935



## சென்னை ஏரிகள் வேகமாக நிரம்புகிறது
## செம்பரம்பாக்கத்துக்கு 3,745 கன அடி நீர்வரத்து

சென்னை, 30 நவம்பர் 2024: பெஞ்ஜல் புயல் மழையால் சென்னை ஏரிகள் வேகமாக நிரம்பி வருகிறது. செம்பரம்பாக்கம் அணைக்கு நீர்வரத்து 3,745 கன அடியாக உயர்ந்துள்ளது.



சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் நேற்றிரவு முதல் கனமழை பெய்து வருகிறது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, புழல், சோழவரம், கண்ணன்கோட்டை, தேர்வாய் கண்டிகை ஆகிய ஏரிகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் நீரின் வரத்து அதிகரித்து வருகிறது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி 449 கன அடியாக இருந்த நீர்வரத்து பகலில் 3,745 கன அடியாக உயர்ந்துள்ளது.

மொத்த கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் தற்போது 2,313 மில்லியன் கனஅடியாக நீர் இருப்பு இருக்கிறது.

ஏரியின் ஒட்டு மொத்த உயரமான 24 அடியில் நீர்மட்டம் 18.82 அடியாக உயர்ந்துள்ளது. மழை காரணமாக 4 மணி நேரத்தில் 8 மடங்காக நீர்வரத்து அதிகரித்துள்ளது.

புழல் ஏரிக்கு இன்று காலை நிலவரப்படி 333 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. ஏரியின் மொத்த கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடி. இதில் 2367 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. 197 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 1081 மில்லியன் கன அடி. இதில் 122 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 58 கனஅடி தண்ணீர் வருகிறது.

பூண்டி ஏரியின் மொத்த கொள்ளளவு 3231 மில்லியன் கனஅடி. இதில் 540 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 460 கனஅடி தண்ணீர் வருகிறது. 127 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கண்ணன்கோட்டை தேர்வாய் கண்டிகை ஏரியில் மொத்த கொள்ளளவான 500 மில்லியன் கனஅடியில் 302 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. ஏரிக்கு 45 கன அடி தண்ணீர் வருகிறது. 15 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

## மழைக் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள்: மக்களுக்கு மின்வாரியம் வேண்டுகோள்

சென்னை, 30 நவம்பர் 2024: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியம் பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளையும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

ஈரமான கைகளால் மின் ஸ்விட்சுகள், மின்சார சாதனங்களை இயக்க முயற்சிக்க வேண்டாம். வீட்டின் உட்புற சுவர் ஈரமாக இருந்தால் மின்சார ஸ்விட்சுகள் எதையும் இயக்கக் கூடாது. வீடுகள் மற்றும் கட்டடங்களில் உள்ள ஈரப்பதமான சுவர்களில் கை வைப்பதை தவிர்க்க வேண்டும். நீரில் நனைந்த பேன், லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்க வேண்டாம். மின்சார மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பகுதி ஈரமாக இருந்தால் உபேயாகிக்கக் கூடாது.

வீட்டில் மின்சாரம் இல்லையென்றால் அருகில் இருந்து தாங்களாகவே ஒயர் மூலம் மின்சாரம் எடுக்க வேண்டாம். மின் கம்பிகள் அறுந்துகிடக்கும் பகுதிகள், மின்சார கேபிள்கள், மின்சார கம்பங்கள், பில்லர் பாக்ஸ் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் இருக்கும் பகுதிகளுக்கு அருகில் செல்லக்கூடாது. சாலைகளிலும், தெருக்களிலும் மின்கம்பங்கள் மற்றும் மின் சாதனங்களுக்கருகே தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் நடப்பதோ, ஓடுவதோ, விளையாடுவதோ மற்றும் வாகனத்தில் செல்வதையோ தவிர்க்க வேண்டும். தாழ்வாக தொங்கிக் கொண்டிருக்கும் மின்சார ஒயர்கள் அருகில் செல்வதையும், தொடுவதையும் தவிர்க்க வேண்டும்.

மின்சார கம்பத்திலோ அல்லது அதற்காக போடப்பட்டுள்ள ஸ்டேவயரின் மீதோ கொடி கயிறு கட்டி துணி காயக்க வேண்டாம். மின் கம்பத்திலோ அல்லது அவற்றை தாங்கும் கம்பங்களிலோ கால் நடைகளை கட்டிவைக்க வேண்டாம். மின் சேவைகள் மின் கம்பி அறுந்து தொங்கிக் கொண்டிருந்தாலோ, மின் கம்பங்கள் உடைந்திருந்தாலோ, சாய்ந்திருந்தாலோ மற்றும் மின்தடை குறித்த புகார்களுக்கு உடனடியாக 24 மணி நேரமும் செயல்படும் மாநில மின்நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளவேண்டும். இவ்வாறு தில் கூறப்பட்டுள்ளது.




## அரசின் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு தாருங்கள்
## வீட்டை விட்டு வெளியே வராதீர்கள்: ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை, 30 நவம்பர் 2024: கனமழை புயல் எச்சரிக்கையை அடுத்து, அத்தியாவசிய தேவைகள் தவிர யாரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என பொதுமக்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசு அனைத்து நிவாரண நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இன்று முழுவதும் அம்மா உணவகங்களில் இலவச உணவு வழங்கப்படும் என்று முதலமைச்சர் கூறியுள்ளார்.

மழை நிலவரம், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பாதிப்பு மாவட்ட கலெக்டர்களிடம் காணொலியில் ஆலோசனை நடத்தி முதல்வர் கேட்டறிந்தார்.

இது குறித்து இன்று அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, பெஞ்ஜல் புயல் காரணமாக சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

வங்கக் கடலில் உருவாகியுள்ள பெஞ்ஜல் புயல் இன்று மாலை காரைக்கால் மற்றும் மாமல்லபுரத்திற்கு இடையே மணிக்கு 70 முதல் 90 கிலோ மீட்டர் காற்றின் வேகத்துடன் கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, இன்று காலை 11 மணிக்கு முதலமைச்சர் மாநில அவசர கால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

இன்று கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாகவும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருடனும் முதலமைச்சர் மழை விபரம், முகாம்கள் விபரம், தண்ணீர் வெளியேற்ற மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து கேட்டறிந்து தக்க அறிவுரைகள் வழங்கினார்.

புயல் மற்றும் மழையினால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைக்கவும், நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படும் நபர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தினார்.

மழை நீர் தேங்கும் இடங்களில், உடனடியாக மழை நீரை வெளியேற்ற மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், புயலின் காரணமாக மரங்கள் விழுந்தால் அதனை உடனே அப்புறப்படுத்தி பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், மின் கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை உடனடியாக சீரமைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மழைக் காலங்களில் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க மருத்துவ முகாம்களை நடத்தவும், அரசு மருத்துவமனைகளில் போதுமான மருந்துகளுடன் பொது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கவும் முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் உள்ள நிவாரண மைய கட்டடங்கள் அனைத்து வசதிகளுடன் தயாராக உள்ளன. தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 5 நிவாரண முகாம்களில் பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்தனர்.

சென்னையில் உள்ள அம்மா உணவகங்களில் இன்று முழுவதும் மக்களுக்கு உணவு இலவசமாக வழங்கிட முதலமைச்சர் உத்தரவிட்டார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி அலுவலக கட்டுப்பாட்டு அறைகளுக்கு பொதுமக்களிடமிருந்து தொலைபேசி வாயிலாக பெறப்படும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுகுன்றம் முத்தமிழ் மன்ற நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களிடம் காணொலி வாயிலாக பேசிய முதலமைச்சர், அவர்களிடம் அங்கு செய்து தரப்பட்டுள்ள உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

முதலமைச்சர் உத்தரவின்படி, கனமழை எச்சரிக்கை வரப்பெற்ற செங்கல்பட்டு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தலா 3 குழுக்களும், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம் மாவட்டங்களுக்கு தலா 2 குழுக்களும் ஆக மொத்தம் 18 பேரிடர் மீட்புப் படையின் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் உத்தரவின்படி, கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்கள் மிக அத்தியாவசியத் தேவைகள் தவிர வேறு காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்க்க வேண்டும் எனவும், கடற்கரை பகுதிகளுக்கு புயலை வேடிக்கை பார்க்க எக்காரணத்தைக் கொண்டும் செல்லக்கூடாது என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், அரசு மேற்கொண்டு வரும் பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பெஞ்ஜல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்து வருவதால் ராயபுரம், சூரியநாராயணன் தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த உணவுக் கூடத்திற்கு நேரில் சென்று பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயாரிக்கப்படும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
சனி, நவம்பர் 30, 2024

# புதுச்சேரியில் கடல் சீற்றம்: கடற்கரை சாலைகள் மூடல்

சென்னை, 30 நவம்பர் 2024: ‘பெஞ்ஜல்’ புயல் காரணமாக புதுச்சேரியில் கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்படுவதால், பொதுமக்கள் செல்லாத வண்ணம் தடுப்புகள் அமைத்து கடற்கரை சாலைகள் மூடப்பட்டுள்ளன.

வங்கக் கடலில் உருவாகியுள்ள பெஞ்ஜால் புயல் காரைக்கால் மாமல்லபுரம் இடையே கரையை கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்தது. மேலும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து புயலின் அபாயத்தை குறிக்கும் வகையில் புதுச்சேரி துறைமுகத்தில் 7-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இன்று காலை முதல் புதுச்சேரி மாநிலத்தில் மிதமான மழை பெய்து வருகிறது.

மேலும் தரைக்காற்று ஆனது 60 கி.மீ. முதல் 70 கி.மீ. வேகத்தில் வீசி வருகிறது. கடல் அலையானது 5 அடி முதல் 6 அடி வரை அதிகரிப்பதால் மீனவ கிராமங்களில் கடல் நீர் புகுந்து வருகிறது. கடல் அலைகளின் சீற்றம் வழக்கத்தைவிட அதிகரித்தும் காணப்படுகிறது.

மேலும் பொதுமக்களும் சுற்றுலாப் பயணிகளும் கடற்கரைப் பகுதிக்கு யாரும் வர வேண்டாம் என மாவட்ட நிர்வாகம் சார்பிலும் காவல்துறை சார்பிலும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கடற்கரைச் சாலை முழுவதும் மூடப்பட்டுள்ளன.

குறிப்பாக பாண்டி மெரினா, சின்ன வீராம்பட்டினம் கடற்கரை, நல்லவாடு, மூர்த்தி குப்பம் கடற்கரை உள்ளிட்ட கடற்கரை கிராமங்களில் உள்ள சுற்றுலா தலங்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளன. கடலோரப் பகுதியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதுச்சேரியில் பெய்துவரும் கனமழை மற்றும் புயல் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் 12 லட்சம் பேருக்கு மாவட்ட நிர்வாகம் குறுஞ்செய்தி மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கூறுகையில், “மக்கள் பாதுகாப்பாக இருக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் தாழ்வான பகுதிகளில் இருந்த மக்களை வேறு பகுதிகளில் தங்க வைத்துள்ளோம். மேலும் அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

மேலும் உதவி தேவைப்படுபவர்கள் 112, 1077 மற்றும் 94889 81070 என்ற வாட்ஸ் அப் எண்கள் ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மகாபலிபுரம் - காரைக்காலுக்கு இடையே இன்று மாலை புயல் கரையை கடக்கிறது



சென்னை, 30 நவம்பர் 2024: பெஞ்ஜல் புயல் இன்று மாலை புதுவைக்கு அருகே மகாபலிபுரத்துக்கு காரைக்காலுக்கும் இடையே கரையை கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

90 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெஞ்ஜல் புயல் தற்போது மணிக்கு 13 கி.மீ. வேகத்தில் நகர்ந்து 110 கி.மீ. தொலைவில் நிலை கொண்டுள்ளது. இதையடுத்து புயல் காரைக்கால் மாமல்லபுரம் இடையே இன்று இரவு அல்லது ஞாயிற்றுக்கிழமை (நாளை) காலை கரையைக் கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தொடர் கனமழை காரணமாக சென்னை நகரின் பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. பல இடங்களில் மரங்கள் அடியோடு சாய்ந்து உள்ளன. சென்னையில் உள்ள 10 சுரங்கப் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

சென்னை தி.நகர் கிரியப்பா சாலையில் உள்ள வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.

சென்னை வானிலை ஆய்வ மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்மேற்கு வங்க கடலில் நிலை கொண்டுள்ள பென்ஜல் புயல் வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று காலை 8.30 மணி அளவில் அதே பகுதியில் புயலாக, புதுவையிலிருந்து சுமார் கிழக்கு வடகிழக்கே 120 கி.மீ. தொலைவிலும், சென்னையிலிருந்து தென்கிழக்கே 110 கி.மீ. தொலைவிலும், நாகப்பட்டினத்திலிருந்து வடக்கு வடகிழக்கே 200 கி.மீ. தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.

இது மேற்கு திசையில் நகர்ந்து வடதமிழக புதுவை கடற்கரையை காரைக்காலிற்கும் மகாபலிபுரத்திற்கும் இடையே இன்று மாலை புயலாக கடக்கக்கூடும். அச்சமயத்தில் காற்றின் வேகம் மணிக்கு 70 முதல் 80 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 90 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.

அடுத்த 7 நாட்களுக்கு வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை விவரம் வருமாறு:

30 ந்தேதி முதல் டிசம்பர் 5 ந்தேதி வரை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்கள், புதுவையில் ஒரு சில இடங்களில் கன முதல் மின கனமழையும், ஒரிரு இடங்களில் அதி கன மழையும், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் கரூர் மாவட்டங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

1 ந்தேதி விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்கள், புதுவையில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, நீலகிரி, ஈரோடு, நாமக்கல், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

2 ந்தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும், கிருஷ்ணவரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

3 ந்தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர்,

அரியலூர், திருச்சி, கள்ளக்குறிச்சி, ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர்

மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் பலத்த தரைக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்துலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்துலும் வீசக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அது கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

# தென்னிந்தியா முழுவதும் அல்ட்ரா வயலட் தனது புதிய அனுபவ மையத்தை சென்னையில் தொடங்குவதன் மூலம் உறுதிப்படுத்துகிறது




சென்னை, 30 நவம்பர் 2024: அல்ட்ரா வயலட் தனது சமீபத்திய அனுபவ மையத்தை சென்னையில் திறப்பதில் பெருமிதம் கொள்கிறது, மேலும் அல்ட்ரா வயலட்டின் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பை தமிழில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஆர்வலர்களுக்கு நெருக்கமாக கொண்டு வரும் வகையில் இப்பகுதியில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வாங்கும் அனுபவத்தை மறுவரையறை செய்ய உள்ளது. சென்னையின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த யூவி விண்வெளி நிலையம் வாடிக்கையாளர்களுக்கு யூவி சூப்பர்நோவா டிசி உடன் பொருத்தப்பட்டிருக்கும் யூவி விண்வெளி நிலையமானது யூவி வால்ட்டின் முதன்மையான உயர் செயல்திறன் மோட்டார் சைக்கிளான எஃப்77 மேக் 2-ஐ ஆராய்வதற்கான அதிநவீன அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு வேகமாக சார்ஜ் செய்யும் உள்கட்டமைப்பு வழங்கும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அல்ட்ரா வயலட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும், இணை நிறுவனருமான நாராயண் சுப்ரமணியம் கூறியதாவது: "சென்னை நகரம் அதன் முற்போக்கான எண்ணம் மற்றும் ஆட்டோமொபைல் மீதான ஆர்வத்திற்கு பெயர் பெற்றது, இது வாடிக்கையாளர்களுடனான எங்கள் ஈடுபாட்டை ஆழப்படுத்த சரியான இடமாக உள்ளது. இது எங்களுக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது. சென்னையில் எங்கள் இருப்பை உறுதிப்படுத்த, ஆரம்பத்தில் யூவி தளத்தை இயக்குவது முதல் இன்று இந்த யூவி விண்வெளி நிலையத்தை திறப்பது வரை; இந்த துடிப்பான நகரத்திற்கு புற ஊதா அனுபவம்."

புதிய யூவி ஸ்பேஸ் ஸ்டேஷன் அதிநவீன வடிவமைப்பு மற்றும் ஊடாடும் மண்டலங்களைக் கொண்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு எதிர்கால இயக்கம் பற்றிய ஆழமான பார்வையை வழங்குகிறது. இது ஒரு விரிவான 3எஸ் வசதியாகவும் செயல்படுகிறது - விற்பனை, சேவை மற்றும் உதிரி பாகங்களை வழங்குகிறது. அல்ட்ரா வயலட் உயர் செயல்திறன் கொண்ட மின்சார மோட்டார் சைக்கிள்களில் முன்னணியில் உள்ளது, இது மின்மயமாக்கப்பட்ட எதிர்காலத்திற்கு வழி வகுக்கிறது.

இதைத் தொடர்ந்து, அல்ட்ரா வயலட் ஆட்டோமோட்டிவ் நிறுவனத்தின் சிடிஓ மற்றும் இணை நிறுவனர் நிரஜ் ராஜ்மோகன் கூறுகையில், "அல்ட்ரா வயலட்டில், எதிர்கால வடிவமைப்பு மற்றும் மேம்பட்ட பொறியியலை உள்ளடக்கிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பால் நாங்கள் உந்தப்பட்டுள்ளோம். இந்த விரிவாக்கம் எவ்வாறு விரைவுபடுத்தப்படும் என்பதைக் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தமிழ்நாடு மற்றும் அதற்கு அப்பால் அதிக செயல்திறன் கொண்ட மின்சார மோட்டார் சைக்கிள்களை ஏற்றுக்கொள்வது."

அல்ட்ராவயலட் எஃப்77 மேக் 2 க்கான முன்பதிவுகள் ஆன்லைனிலும் அனுபவ மையத்திலும் கிடைக்கின்றன. சென்னையில் உள்ள வாடிக்கையாளர்கள், புற ஊதாக்கலையை வரையறுக்கும் புதுமை மற்றும் வடிவமைப்பின் தடையற்ற கலவையை இப்போது நேரடியாக அனுபவிக்க முடியும்.

சென்னையில் உள்ள யூவி விண்வெளி நிலையத்தின் முகவரி: எண். 375, மவுண்ட் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை, தமிழ்நாடு - 600015 லேண்ட்மார்க் : சைதாப்பேட்டை மெட்ரோவுக்கு அடுத்தது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (30.11.2024), உலகப் பாரம்பரிய வாரத்தை முன்னிட்டு தொல்லியல் துறை மற்றும் சிவகளை தொல்லியல் கழகம் இணைந்து நடத்தும் 150 ஆசிரியர்கள் கீழடிக்கு செல்லக்கூடிய ஒரு நாள் தொல்லியல் களப்பயணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. தகணேஷ்மூர்த்தி அவர்கள் உள்ளார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (30.11.2024), பள்ளிக் கல்வித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.ஐஸ்வர்யா, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.தகணேஷ்மூர்த்தி அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

# டாக்டர். கனிமொழி கே, ஏஆர்டி கருவுறுதல் கிளினிக்குகளில் இயக்குனராகவும் மருத்துவத் தலைவராகவும் இணைகிறார்

சென்னை, 30 நவம்பர் 2024: இனப்பெருக்க மருத்துவத்தில் உலக அளவில் முன்னணியில் இருக்கும் ஏஆர்டி ஃபெர்ட்டிலிட்டி கிளினிக்குகள், சென்னையிலுள்ள ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகளில் இயக்குநராக டாக்டர் கனிமொழி கே நியமிக்கப்பட்டுள்ளதாக பெருமையுடன் அறிவித்தது. இனப்பெருக்க ஆரோக்கியத்தில் ஒரு முன்னோடியான டாக்டர். கனிமொழி, மகப்பேறு, மகப்பேறு மருத்துவம் மற்றும் இனப்பெருக்க மருத்துவம் ஆகியவற்றில் 16 ஆண்டுகளுக்கும் மேலான இணையற்ற நிபுணத்துவத்தைக் கொண்டு, இந்தியாவில் உலகத் தரம் வாய்ந்த கருவுறுதல் சிகிச்சைகளை வழங்குவதில் ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகளின் உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துகிறார். ஐவிஐ ஆர்எம்ஏ குளோபலின் விரிவாக்கமாக 2015 இல் நிறுவப்பட்ட ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகள், இனப்பெருக்க மருத்துவம் மற்றும் கருவுறுதல் பராமரிப்பில் உலகளாவிய முன்னணியில் உள்ளது. " அறிவியல் அசிஸ்ட்டிங் நேச்சர்" என்ற அவர்களின் முக்கிய நெறிமுறைகளுடன், ஏஆர்டி கருவுறுதல் கிளினிக்குகள் தனிப்பயனாக்கப்பட்ட, நெறிமுறை மற்றும் வெளிப்படையான கவனிப்பில் நிபுணத்துவம் பெற்றவை. அவர்களின் கிளினிக்குகள் மேம்பட்ட மரபணு சோதனை, தனியுரிம ஆராய்ச்சி



ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகின்றன, மேலும் அவர்களின் அதிநவீன உள்கட்டமைப்பு மற்றும் மிகவும் திறமையான மருத்துவக் குழுக்களால் சர்வதேச அளவில் வேறுபடுகின்றன.

தனது துறையில் முன்னோடியான டாக்டர் கனிமொழி, இந்தியாவில் முதன் முதலில் எம்.சி.எச். இனப்பெருக்க மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில். அவரது விரிவான அனுபவத்தில் இனப்பெருக்க உட்சுரப்பியல், கருவுறுதல் பாதுகாப்பு, அறுவை சிகிச்சை ஹிஸ்டரோஸ்கோபி மற்றும் மேம்பட்ட அல்ட்ராசவுண்ட் நுட்பங்கள் ஆகியவை அடங்கும், மேலும் அவரை களத்தில் மிகவும் திறமையான நிபுணர்களில் ஒருவராக நிலைநிறுத்துகிறது. "டாக்டர். கனிமொழியின் விதிவிலக்கான தகுதிகளும் அர்ப்பணிப்பும் ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்கின் மருத்துவச் சிறப்பு மற்றும் இரக்கமுள்ள கவனிப்பு ஆகியவற்றின் நெறிமுறைகளுடன் முழுமையாக ஒத்துப்போகின்றன" என்று ஏஆர்டி ஃபெர்ட்டிலிட்டி கிளினிக்ஸ், இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் சோமேஷ் மிட்டல் கூறினார். சந்தேகத்திற்கு இடமின்றி பல தம்பதிகள் உணர உதவும் எங்கள் முயற்சிகளை வலுப்படுத்தும் அவர்களின் பெற்றோரின் கனவுகள்." சென்னையில் உள்ள ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகளில் டாக்டர் கனிமொழி சேர்த்தது, கருவுறுதல் சிகிச்சையில் தரநிலைகளை மறுவரையறை செய்வதற்கான கிளினிக்கின் பணியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. உலகளாவிய கர்ப்ப வெற்றி விகிதங்கள் 70% ஆக உயர்ந்துள்ள ஆராய்ச்சி-உந்துதல், சான்றுகள் அடிப்படையிலான மருத்துவத்தின் மீதான ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகளின் முக்கியத்துவத்தை அவரது பங்கு ஆதரிக்கும்.

"டாக்டர். கனிமொழியின் தலைமையானது எங்களின் தனிப்பயனாக்கப்பட்ட பராமரிப்பு அணுகுமுறையை மேலும் மேம்படுத்தும், இது அதிநவீன தொழில்நுட்பத்தை பச்சாதாபம் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் இணைக்கிறது," என்று இந்தியாவின் ஏஆர்டி கருவுறுதல் கிளினிக்குகளின் இணை மருத்துவ இயக்குனர் டாக்டர் பருல் கட்டியார் கூறினார். திருப்தி நாங்கள் வழங்கும் பராமரிப்பின் தரத்தை உயர்த்தும்." இந்தியாவில் 10 கிளினிக்குகள் மற்றும் ஐரோப்பா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் வரவிருக்கும் துவக்கங்களுடன், ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகள் உலக அளவிலும் இந்தியாவிலும் அதன் தடத்தை விரிவுபடுத்துகிறது. இந்த நியமனம், உயர்ந்த நெறிமுறை தரங்களைக் கடைப்பிடிக்கும் போது விரிவான இனப்பெருக்க தீர்வுகளை வழங்குவதில் ஏஆர்டி இன் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. டாக்டர் கனிமொழி தனது உற்சாகத்தை வெளிப்படுத்தி, "இனப்பெருக்க மருத்துவத்தில் சிறந்து விளங்கும் நிறுவனமான ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகளில் சேருவது பெருமையாக உள்ளது. நோயாளிகள் தங்கள் பெற்றோரின் கனவுகளை அடைய உதவும் புதுமையான சிகிச்சைகள் மற்றும் ஆராய்ச்சியின் பாரம்பரியத்திற்கு பங்களிக்க நான் ஆர்வமாக உள்ளேன். அவரது தலைமையுடன், ஏஆர்டி கருத்தரிப்பு கிளினிக்குகள், சென்னை, இனப்பெருக்க சுகாதாரத்தில் புதிய வரையறைகளை அமைக்க தயாராக உள்ளது, மேலும் உலகம் முழுவதும் கருணையுடன் கூடிய, அதிநவீன கருவுறுதல் சிகிச்சைகளை வழங்குவதற்கான ஏஆர்டியின் நோக்கத்தை மேம்படுத்துகிறது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (30.11.2024), மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும், அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மற்றும் உயர் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் வெளியிடப்படும் ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு இதழ்களில் சிறந்த ஓவியங்கள், கவிதைகள் மற்றும் அறிவியல் கட்டுரைகள் எழுதி மாநில அளவில் சிறந்த படைப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு தூத்துக்குடி மாவட்ட அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப, அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.ஐஸ்வர்யா, இ.ஆ.ப, அவர்கள், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.த.கணேஷ்மூர்த்தி அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

# வங்கிக் காப்பீட்டு கூட்டாண்மைக்காக ஏ யூ ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியுடன் கைகோர்க்கும் பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் இன்சூரன்ஸ்




சென்னை, 30 நவம்பர் 2024: இந்தியாவின் மிகப்பெரிய சிறு நிதி வங்கியான ஏ யூ ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி (ஏ யூ எஸ் எஃப் பி), மற்றும் இந்தியாவின் முன்னணி தனியார் ஆயுள் காப்பீடு நிறுவனங்களில் ஒன்று மற்றும் பாரதி லைஃப் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (பாரதி குழுமம்) இன் முழு சொந்த நிறுவனமான பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் இன்சூரன்ஸ் உடன் வணிக ரீதியாக கூட்டாண்மை மேற்கொண்டுள்ளது. அதன்படி, ஏ யூ எஸ் எஃப் பி இன் வாடிக்கையாளர்களுக்கு விரிவான ஆயுள் காப்பீடு மற்றும் நிதி பாதுகாப்பு தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட வணிகரீதியாக வங்கி காப்பீட்டு கூட்டாண்மையை இன்று அறிவித்தது.

ஏ யூ சிறு நிதி வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் துணை சி ஈ ஓ திரு. உத்தம் திப்ரேவால் மற்றும் பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் இன்சூரன்ஸ் எம் டி & சி ஈ ஓ திரு. பராக் ராஜா ஆகியோர் வரலாற்று சிறப்புக்குரிய இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர் மற்றும் இந்த சிறப்புக்குரிய வணிகரீதியான கூட்டாண்மையை இன்று மும்பையில் நடந்த நிகழ்வில் அறிவித்தனர்.

இந்த கூட்டணி இரு நிறுவனங்களின் பரந்த அளவிலான வணிக வெற்றியின் ஒரு பகுதியாகும், "விக்சித் பாரத்" மற்றும் "அனைவருக்கும் காப்பீடு" என்ற அவர்களின் பகிரப்பட்ட பார்வையுடன் இணைந்து, காப்பீட்டு ஊடுருவலை இயக்குதல், தனிப்பயனாக்கப்பட்ட காப்பீட்டு சலுகைகளை உருவாக்குதல், முக்கிய சந்தைகளை குறிவைத்தல், வங்கி காப்பீடு மற்றும் டிஜிட்டல் விநியோகம் மற்றும் விநியோகங்களுடன் வணிகரீதியான கூட்டாண்மைகளை ஆராய்தல் ஆகிய சேவைகளை மேற்கொள்ளும். உடனடியாக அமலுக்கு வரும் வகையில், ஏ யூ எஸ் எஃப் பி இன் வாடிக்கையாளர்கள் பாரதி ஏ எக்ஸ் ஏ இன் விரிவான ஆயுள் காப்பீடு மற்றும் நிதிப் பாதுகாப்பு தீர்வுகள், ஆயுள் காப்பீடு, டேர்ம் இன்ஷூரன்ஸ், யூலிப் திட்டங்கள், சேமிப்புத் திட்டங்கள், குழந்தைக் கல்வித் திட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவார்கள். இந்த வணிகரீதியான கூட்டாண்மையானது தென்னிந்தியாவில் ஏ யூ எஸ் எஃப் பி இன் சலுகைகளை கணிசமாக மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, பரந்த அளவிலான நிதி தீர்வுகள், நெறிப்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவுடன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முழுமையான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் இன் பல்வகைப்பட்ட போர்ட்ஃபோலியோவை மேம்படுத்துகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி உடனான உலகளாவிய வங்கி உரிமத்திற்கான அதன் சமீபத்திய விண்ணப்பத்தைத் தொடர்ந்து, ஏ யூ எஸ் எஃப் பி அதன் 1 கோடிக்கும் அதிகமான பரந்த வாடிக்கையாளர் தளத்திற்கு அதிநவீன, தொழில்நுட்பம் சார்ந்த காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதற்காக அதன் வங்கி காப்பீட்டுத் துறையை வணிக ரீதியாக மேம்படுத்துகிறது. இந்த வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட மூலோபாயம் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தனிப்பட்ட நிதித் தேவைகளை மதிப்பிடுவதற்கும் நிவர்த்தி செய்வதற்கும் ஏ யூ எஸ் எஃப் பிக்கு அதிகாரம் அளிக்கிறது.

கூட்டாண்மை குறித்து பேசிய ஏ யூ ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கியின் செயல் இயக்குநரும், துணை தலைமை நிர்வாக அதிகாரியுமான திரு உத்தம் திப்ரேவால் பேசுகையில், "ஏ யூ எஸ் எஃப் பி ஆனது வாடிக்கையாளர் தேவையை மையமாக் கொண்டு செயல்படும் நிறுவனமாகும். வாடிக்கையாளர்களை மனதில் கொண்டே ஒவ்வொரு சேவையையும் அக்கறையுடன் மேற்கொள்கிறது. அதன்படி, வாடிக்கையாளர்களின் புதுப்புது தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ந்து வங்கி சேவையை மேம்படுத்துதல் மற்றும் மாற்றியமைத்தல் ஆகியவற்றிலும் வங்கி முனைப்புடன் செயல்படுகிறது. அதன்படி, ஏ யூ எஸ் எஃப் பி ஆனது பரந்த அளவிலான புதுமையான ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகளை வழங்குவதற்காக பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் இன்சூரன்ஸ் உடன் கூட்டு சேர உற்சாகமாக உள்ளது. இந்த ஒத்துழைப்பு எங்கள் வாடிக்கையாளரின் விருப்பங்களை அடையவும், அவர்களின் அன்புக்குரியவர்களை பாதுகாக்கவும் மற்றும் அவர்களின் நிதி எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் உதவும். இந்த கூட்டாண்மை, எங்களின் 'வாங்கி சேவையுடன் காப்பீடும்' எனும் நெறிமுறைகளை உள்ளடக்கிய அதே வேளையில், விருப்பமான டிஜிட்டல் நிதி பங்குதாரராக மாறுவதற்கான எங்கள் பார்வையை நனவாக்கும் ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது. ஏ யூ எஸ் எஃப் பி இன் வாடிக்கையாளர் சார்ந்த அணுகுமுறை தனிநபர்கள் தங்களுக்கு மிகவும் பொருத்தமான காப்பீட்டுத் தீர்வைத் தேர்வுசெய்ய அனுமதிக்கும். தவிர, நியாயமான மற்றும் வெளிப்படையான விற்பனை நடைமுறைகளைப் பெறுவதை உறுதிசெய்யப்படும்" என்றார்.

கூட்டாண்மை குறித்த பாரதி ஆக்ஸா லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் எம் டி & சி ஈ ஓ திரு. பராக் ராஜா பேசுகையில், " இந்தியாவின் அணுகப்படாத மற்றும் வங்கியில்லாத மக்களுக்கு சேவை செய்வதற்கான வலுவான பாரம்பரியத்தைக் கொண்ட ஏ யூ எஸ் எஃப் பி உடனான எங்கள் மூலோபாய கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஏ யூ எஸ் எஃப் பி இன் விரிவான நெட்வொர்க், காப்பீட்டை எளிமையாக்குவதில் எங்களின் நிபுணத்துவத்துடன் இணைந்து, ஒரு சக்திவாய்ந்த சினெர்ஜியை உருவாக்குகிறது. இது எங்களுக்குத் தேவையான மற்றும் புதுமையான நிதித் தீர்வுகளை வழங்க அனுமதிக்கிறது. 2047க்குள் 'அனைவருக்கும் காப்பீடு' என்ற ஐ ஆர் டி ஏ ஐ யின் பார்வையுடன் இந்தக் கூட்டணி இணைந்துள்ளது. எங்கள் திறன்களை இணைப்பதன் மூலம், பாரதி ஏ எக்ஸ் ஏ லைஃப் மற்றும் ஏ யூ எஸ் எஃப் பி வாடிக்கையாளர்களுக்கு மிகவும் விரிவான நிதி அனுபவத்தை உருவாக்குவதற்கு எதிர்நோக்குகின்றன. இதன்மூலம், காப்பீடு அதிகரிப்பதுடன், நிறுவனமானது இலக்கினை நோக்கி முன்னேறுகிறது" என்றார்.

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com RNI No.: TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனி, நவம்பர் 30, 2024

# ஸ்ருதி ஹாசனுடன் ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டியில் கிறிஸ்துமஸ் பிரம்மாண்டம்



சென்னை, 30 நவம்பர் 2024: ஃபீனிக்ஸ் மார்க்கெட்சிட்டி மற்றும் பல்லேடியம் சென்னை ஆகியவை தங்களது பிரம்மாண்டமான கிறிஸ்துமஸ் மரம் விளக்கு விழாவின் போது ஒப்பிடமுடியாத செழுமையுடன் பண்டிகை காலத்தை வரவேற்றன. நடிகை ஸ்ருதி ஹாசன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு, அற்புதமான கிறிஸ்துமஸ் மரத்தை ஒளிரச் செய்ததால், சென்ட்ரல் ஏட்ரியம் நேர்த்தியின் புகலிடமாக மாறியது.

அன்பு, நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் சின்னமாக உயர்ந்து நிற்கும் கண்கவர் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் மரத்தை திறந்து வைத்து, கிறிஸ்துமஸ் விழா கொண்டாடினர். இந்த நிகழ்வு குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் பார்வையாளர்களை ஒன்றிணைத்தது. பண்டிகை விளக்குகள், கரோல்கள் மற்றும் விடுமுறை காலத்தின் சாராம்சம் நிறைந்து கிறிஸ்துமஸ் விழா கொண்டாடினர்.

# கவிப்பேரரசு வைரமுத்து படைப்புலகம் பன்னாட்டுக் கருத்தரங்கம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு



சென்னை, 30 நவம்பர் 2024: கவிப்பேரரசு வைரமுத்துவின் கவிதைக்கு வயது 52. அவரது திரைப்பாட்டுக்கு வயது 44. இதுவரை 39 நூல்கள் எழுதியிருக்கிறார். சாகித்ய அகாடமி விருதுபெற்ற இவரது கள்ளிக்காட்டு இதிகாசம் 10 இந்திய மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறது; மேலும் 12 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்காக 7 ஜனாதிபகளிடம் விருது பெற்றிருக்கிறார். இவரது படைப்புகளை ஆராய்ச்சி செய்து இதுவரை 180 பேர் டாக்டர் பட்டமும், எம்.பில் பட்டமும் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவின் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து படைப்புகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் நடைபெறுகிறது. உலகெங்கிலுமிருந்தும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் கலந்துகொண்டு கட்டுரை வாசிக்கிறார்கள். கருத்தரங்கம் முழுநாள் நிகழவிருக்கிறது. மாலையில் நிகழும் நிறைவு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொள்ள வேண்டும் என்று கவிப்பேரரசு வைரமுத்து நேரில் சென்று அழைப்பு விடுத்தார்.

# இலங்கையின் அம்பாந்தோட்டையில் 10 ‘மினி-இந்தியா மூலைகளை’ நிறுவுதல்



சென்னை, 30 நவம்பர் 2024: இலங்கையின் தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 10 கிராமப்புற நூலகங்கள் மற்றும் மினி-இந்தியா மூலைகளை நிறுவுவதற்கு இந்தியா ஆதரவளித்துள்ளது. இந்தியாவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இந்த நூலகங்கள் மற்றும் மூலைகள், கிராமப்புறங்களில் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு புதிய பாடங்களை ஆராய்வதற்கும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய துணைத் தூதரகம் சமூக ஊடக தளமான 'எக்ஸ்' இல் செய்தியைப் பகிர்ந்து கொண்டது, "அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய துணைத் தூதரகம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 10 மினி-இந்தியா மூலைகளை நிறுவுவதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது" என்று கூறினார்.

மற்றொரு அறிக்கையில், இலங்கையின் தேசிய இலக்கிய மாதம் மற்றும் வாசிப்பு மாத கொண்டாட்டங்களின் ஒரு பகுதியே இந்த முயற்சி என்று துணைத் தூதரகம் எடுத்துரைத்தது. இந்த கிராமப்புற நூலகங்களில் உள்ள 'இந்தியா கார்னர்கள்' உள்ளூர் சமூகங்களுக்கு மதிப்புமிக்க ஆதாரங்களாகச் செயல்படும், புத்தகங்களுக்கான அணுகலை வழங்குவதோடு, எல்லா வயதினருக்கும் வாசகர்களை ஊக்குவிக்கும். இந்த முயற்சி கிராமப்புற சமூகங்களிடையே வாசிப்பு மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் கலாச்சாரத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில், கான்சல் ஜெனரல் ஹர்விந்தர் சிங், கிராமப்புற நூலகங்களுக்கு சிங்கள மொழி புத்தகங்களை வழங்கினார். மேலும், நூலகங்களின் சேகரிப்பை மேலும் செழுமைப்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து வாங்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் வாசிப்புப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த ஒத்துழைப்பு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் கல்வி மற்றும் கலாச்சார முன்முயற்சிகளை ஆதரிப்பதற்கான இந்திய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதன் “அண்டை நாடுகளுக்கு முதலில்” என்ற கொள்கையின் கீழ், உள்கட்டமைப்பு மேம்பாடு முதல் கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் தொடர்ந்து ஆதரவு வரை பல்வேறு துறைகளில் இந்தியா தீவிரமாக இலங்கைக்கு உதவி வருகிறது.

# மஹிந்திரா நிறுவனம் ரூ.18.90 இலட்சம் விலையில் தொடங்குகிற பி ஈ 6இ மற்றும் ரூ.21.90 இலட்சம் விலையில் தொடங்குகிற எக்ஸ் ஈ வி 9இ வாகனங்களை அறிமுகம் செய்கிறது



சென்னை, 30 நவம்பர் 2024: மஹிந்திரா நிறுவனம் தனது முதன்மையான எலக்ட்ரிக் ஆரிஜின் எஸ்யூவிகளான பி ஈ 6இ மற்றும் எக்ஸ் ஈ வி 9இ ஆகியவற்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் எலக்ட்ரிக் மொபிலிட்டி தரநிலைகளை மாற்றியுள்ளது. அவை ஒரு முழுமையான புரட்சிகர மின்சார உற்பத்தி கொண்ட கட்டமைப்பு இன்குளோவில் கட்டமைக்கப்பட்டுள்ளன, மேலும் அவை உலகின் அதிவேக வாகன அறிவுசார் திறன் கொண்ட எம் ஏ ஐ ஏ ஆல் இயக்கப்படுகின்றன. இந்த வாகனங்கள் இந்திய கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு உலகளாவிய வரையறைகளுக்கு சவால் விடுவது மட்டுமல்லாமல் புதியவற்றை அமைக்கும் ஒரு சகாப்தமான மஹிந்திரா நிறுவனத்தின் "அன்லிமிட் இந்தியா" பற்றிய பார்வையை உள்ளடக்கியது. பி ஈ 6இ மற்றும் எக்ஸ் ஈ வி 9இ ஆகியவற்றின் இந்த அறிமுக விலை* இன்று குளோபல் பிரீமியரில் அறிவிக்கப்பட்டது.

ஒரு வாழ்க்கை முறை பிராண்டை உருவாக்குதல்

அவர்களின் அபிலாஷைகளுடன் ஒத்துப்போகும் மற்றும் அவர்களின் திறனை வரம்பற்றதாக்கும் அனுபவங்களைத் தேடுபவர்களுடன் ஆழமாக தாக்கத்தை ஏற்படுத்தும் வாகனங்களை உருவாக்கும் அர்ப்பணிப்பின் மீது மஹிந்திராவின் பிராண்ட் மூலோபாயம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த பி ஈ 6இ, அதன் ஸ்போர்ட்டி, செயல்திறன் சார்ந்த ஈர்ப்பு ஆகியவற்றுடன் சாகச மற்றும் துல்லியத்தின் சிலிர்ப்பை உள்ளடக்கிய வரம்புகளை மீறும் சாகசக்காரர்கள் மற்றும் சாதனையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாறாக, இந்த எக்ஸ் ஈ வி 9இ ஆனது, நாகரீகமான நேர்த்தியுடன் ஒப்பிடமுடியாத சொகுசை வழங்குகின்ற ஆடம்பரத்தை மறுவரையறை செய்கிறது.

வகுப்பு முன்னணி வரம்பு, புத்திசாலித்தனமான சவாரி இயக்கவியல், அதிநவீன பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் சினிமாத்தரமான உள் கேபின் அனுபவத்துடன், இந்த எலெக்ட்ரிக் ஆரிஜின் எஸ்யூவிகள் வெறும் வாகனங்கள் அல்ல- அவை தைரியமான, உண்மையான வாழ்க்கை முறையின் வெளிப்பாடுகள் ஆகும்.


உணர்வுபூர்வ வடிவமைப்பு

மஹிந்திராவின் எலெக்ட்ரிக் ஆரிஜின் எஸ்யூவிகள் உணர்வுபூர்வ வடிவமைப்பு தத்துவத்தை உள்ளடக்கி, துணிச்சலான புதுமை மற்றும் நவீன ஆடம்பரத்தின் மூலம் தங்கள் உரிமையாளர்களுடன் ஒரு உணர்ச்சிபூர்வமான பிணைப்பை உருவாக்குகின்றன. தோரணையான வெளிப்புறங்கள் மற்றும் சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட உட்புறங்களுடன், பி ஈ 6இ மற்றும் எக்ஸ் ஈ வி 9இ ஆகியவை அழகியல் மற்றும் செயல்பாட்டில் புதிய தரநிலைகளை அமைக்கின்றன. இந்த எக்ஸ் ஈ வி 9இ ஆனது அதன் கவர்ச்சியான எஸ் யூ வி கூபே வடிவத்துடன் அதிநவீனத்தை வெளிப்படுத்துகிறது, ஆடம்பரமான சொகுசை ஆற்றல் வாய்ந்த செயல்திறனுடன் இணைக்கின்ற அதேவேளையில், பி ஈ 6இ பந்தயத்தால் ஈர்க்கப்பட்ட சுறுசுறுப்பு, தடகள பாணி மற்றும் மூர்க்கமான வடிவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் வாகன பிரிவுத் தலைவர் மற்றும் மஹிந்திரா எலக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் வீஜேநக்ரா கூறுகையில், "எங்கள் பிராண்ட் யோசனையை ஊக்கப்படுத்திய இந்த நுண்ணறிவு மிகவும் சக்திவாய்ந்த மனித உணர்ச்சியான, தொடருகின்ற, எங்கள் ஆழ்ந்த தேர்வுகளை ஊக்குவிக்கிற மற்றும் நாம் யார் என்பதை வரையறுக்கிற அன்பில் வேரூன்றியுள்ளது. எங்களின் எலெக்ட்ரிக் மூல எஸ் யூ விக்களான, பி ஈ 6இ மற்றும் எக்ஸ் ஈ வி 9இ ஆகியவை எங்கள் வாடிக்கையாளர்களை வரம்பற்ற வாழ்க்கையை வாழ ஊக்குவிக்கும் வரம்பற்ற அன்பு பற்றியது, அவர்களை உயிருடன் உணரவைக்கும் அனுபவங்களுடன் நிரப்பப்பட்டது. தவிர்க்க முடியாத இருப்பு, இணையற்ற தொழில்நுட்பம் மற்றும் நிகரற்ற செயல்திறனுக்காக வடிவமைக்கப்பட்ட எங்களின் மின்சார ஆரிஜின் எஸ் யூ விகள் புதிய உலகளாவிய தரநிலைகளை அமைக்கும். அதன் கடினமான, தடகள பாணி மற்றும் பந்தயத்தால் ஈர்க்கப்பட்ட சுறுசுறுப்பு ஆகியவற்றுடன் இந்த பி ஈ 6இ, செயல்திறன் மற்றும் உற்சாகம் ஆகியவற்றில் செழித்து வளருபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது அதே வேளையில் எக்ஸ் ஈ வி 9இ ஆனது, சொகுசான ஆடம்பரத்தை ஆற்றல் மிக்க செயல்திறனுடன் தடையின்றி கலக்கின்ற அதன் வனப்புமிக்க எஸ் யூ வி கூபே வடிவமைப்புடன் அதிநவீனத்தை வெளிப்படுத்துகிறது." என்று கூறினார்.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் நிறுவனத்தின் வாகன தயாரிப்பு மேம்பாட்டுத் தலைவர் மற்றும் மஹிந்திரா எலக்ட்ரிக் ஆட்டோமொபைல் லிமிடெட் இன் இணை நிர்வாக இயக்குநரான ஆர் வேலுசாமி கூறுகையில், “பி ஈ 6இ மற்றும் எக்ஸ் ஈ வி 9இ ஆகியவை உலக சாதனை படைக்கும் அடுத்த இந்திய அடையாளச் சின்னங்கள் ஆகும். எலெக்ட்ரிக் ஆக உருவாக்கப்பட்ட ஒரு வாகனத்திற்கும் மற்றும் இந்த இரண்டு பார்ன் எலக்ட்ரிக் எஸ் யூ விக்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நீங்கள் முன்பே பார்த்த ஒன்று, மற்றொன்று நீங்கள் முன்பு பார்த்தது போல் இல்லாத ஒன்று. ஒன்று தொழிற்துறையின் செயல்திறனுக்கான தரநிலைகளுடன் பொருந்துகிற அதே வேளையில் மற்றொன்று தொழில்துறை செயல்திறனுக்கான ஒரு புதிய தரநிலையை நிறுவுகிறது. ஒன்று விரைவில் வரலாறாக இருக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது, அதே சமயம் மற்றொன்று அனைத்தையும் வரலாறாக மாற்றும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு தயாரிப்புகளும் எங்களின் முழுமையான புரட்சிகர மின்சார மூலம் கொண்ட கட்டமைப்பான இன்குளோ ஐ அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டு, புதிய உலகளாவிய தரநிலைகளை அமைக்கின்ற மஹிந்திராவின் அன்லிமிட் இந்தியா பார்வையை உள்ளடக்கி, உலகின் அதிவேக வாகன அறிவுசார் திறன் கொண்ட எம் ஏ ஐ ஏ மூலம் இயக்கப்படுகிறது. "என்று கூறினார்.

# லட்சுமி கிரியேஷன்ஸ் சார்பில் இசக்கி கார்வண்ணன் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் விமல் நடிக்கும் புதிய படம் ‘பரமசிவன் பாத்திமா‘, காதலுக்கு மதங்கள் எவ்வாறு தடையாக நிற்கின்றன என்பது குறித்து பேசுகிறது




சென்னை, 30 நவம்பர் 2024: இயக்குநர்-நடிகர் சேரன் முதன்மை வேடத்தில் நடித்து பாராட்டுகளை குவித்த 'தமிழ்க்குடிமகன்' திரைப்படத்தை படைத்த இசக்கி கார்வண்ணன், லட்சுமி கிரியேஷன்ஸ் சார்பில் தயாரித்து இயக்கும் 'பரமசிவன் பாத்திமா' எனும் புதிய படத்தில் விமல் கதையின் நாயகனாக நடிக்கிறார்.

புரொடக்ஷன் நம்பர் 7 ஆக உருவாகும் இப்படம், மலை கிராமத்தில் வசிக்கும் இரு வேறு நம்பிக்கைகளை சார்ந்த மக்களின் வாழ்க்கையை மதங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை பாசாங்கின்றி சுவாரசியத்துடன் விவரிக்கிறது.

இப்படத்தில் விமல் நாயகனாக நடிக்க சாயாதேவி, எம். எஸ். பாஸ்கர், மனோஜ் குமார், ஸ்ரீ ரஞ்சனி, ஆதிரா, அருள்தாஸ், கூல் சுரேஷ், காதல் சுகுமார், வீரசமர் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

'பரமசிவன் பாத்திமா' திரைப்படத்திற்கு மைனா சுகுமார் ஒளிப்பதிவு செய்ய, தீபன் சக்கரவர்த்தி இசை அமைக்க, இசக்கி கார்வண்ணன் எழுதி இயக்குகிறார். படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

லட்சுமி கிரியேஷன்ஸ் சார்பில் இசக்கி கார்வண்ணன் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் விமல் நடிக்கும் 'பரமசிவன் பாத்திமா' படப்பிடிப்பு விரைவில் நிறைவடையும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். படம் குறித்த இதர தகவல்கள் அதிகாரப்பூர்வமாக வெகு விரைவில் வெளியிடப்படும்.